OS.No. :8/2024

நாள் : 29.10.2024.

வா.சா. :2

பெயர் :இளங்கோவன்

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

**7 முதல் 9 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியமளிக்க சம்மன் வந்ததா என்றால் இல்லை. என்னை யார் சாட்சி சொல்ல அழைத்தார்கள் என்றால் என் அக்கா இந்திராணி (வாதி). எனக்கு பூர்வீகம் கொற்கை கிராமம். என் மைத்துனர் சக்கரவர்த்திக்கு பூர்வீகம் மயிலாடுதுறை. சக்கரவர்த்திக்கு எங்கள் கிராமத்தில் சொத்து எதுவும் இல்லை ஐவநல்லூர் கிராமத்தில் சொத்து இருந்தது. எவ்வளவு சொத்து என்றால் சொந்தமாக 360 குழி நஞ்சை நிலம் இருந்தது. அது இல்லாமல் 8 மா அடகு பிடித்திருந்தார். அடகு பிடித்திருந்த நிலத்தை நில உரிமையாளர்களிடம் திரும்ப கொடுத்தாகிவிட்டது என்றால் சரி. 360 குழி நஞ்சை நிலமும் 8 மா அடகு பிடித்திருந்த நிலமும் இருந்ததாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் நிலம் இருக்கிறது என்று சொல்லியுள்ளேன். என் மைத்துனர் சக்கரவர்த்தி யாரிடம் அவரது சொந்த நிலத்தை எப்போது எவ்வளவுக்கு விற்றார் என்றால் ஒரு குழி 375 ரூபாய்க்கு சின்னத்தம்பி படையாட்சி என்பவரிடம் 30 வருடத்திற்கு முன்பு விற்றார். எனது பிரமாண வாக்குமூலத்தில் இந்த விவரத்தையும் சொல்லவில்லை என்றால் சரி. கச்சேரி ரோட்டில் உள்ள கட்டிடம் எந்த வருடம் கட்டப்பட்டது என்றால் 30 வருடத்திற்கு முன்பு கட்டப்பட்டது. சக்கரவரத்திக்கு குடிப்பழக்கம் உண்டு என்றால் எப்போதாவது குடிப்பார். சக்கரவர்த்தி எப்போது இறந்தார் என்றால் சுமார் 25 வருடங்களுக்கு முன்பு இறந்தார். சக்கரவர்த்தி இறக்கும் போது கல்லீரல் பாதிக்கப்பட்டு இறந்தார் என்றால் கல்லீரல் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் இருந்தார். அதன்பிறகு Discharge ஆகிவிட்டார். இறக்கும்போது உடல்நலக்குறைவால் தான் இறந்தார். எத்தனை வருடம் அவர் மருத்துவ சிகிச்சை பெற்றார்

என்றால் ஒரு ஆறு மாத காலம். சக்கரவர்த்தியை நான் மருத்துவமயையிலிருந்து கவனித்து கொண்டதாக சொல்வதால் மருத்துவமனையில் அனுமதித்த சீட்டு discharge சீட்டு வைத்துள்ளேனா என்றால் இல்லை. சக்கரவர்த்தி அதிக குடிப்பழக்கத்தால் கல்லீரல் பாதிக்கப்பட்டு 6 வருடமாக தொடர் சிகிச்சையில் இருந்தார் என்றாலும் அதற்கா மருத்துவ ஆவணங்கள் இந்த பிரதிவாதிகளிடம் உள்ளது என்றால் சரியல்ல. ஆறு வருடங்கள் சிகிச்சை பெறவில்லை. ஆறு மாதம் தான் சிகிச்சை பெற்றார். அவர் சிகிச்சையின் போது நான் உடனிருந்ததாக சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல. சக்கரவர்த்தி இறக்கும் போது அவருக்கு என்ன வயது என்று தெரியுமா என்றால் 50, 55 இருக்கும். சக்கரவர்த்தி இறந்த பின் குடும்ப நிர்வாகத்தை யார் செய்தார்கள் என்றால் என் அக்காவும் அவரது மூத்த மகன் 1ம் பிரதிவாதி ஜெயக்குமாரும் பார்த்துக்கொண்டார்கள். கச்சேரி ரோட்டில் வீடு கட்டுவதற்கு முனிசிபாலிட்டியில் permission யார் வாங்கினார்கள் என்றால் ஜெயக்குமார் அவர் மூத்த பிள்ளை என்பதாலும் படித்தவர் என்பதாலும் அவர் பெயரில் வாங்கினார். எப்போது அனுமதி வாங்கப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. சக்கரவர்த்தி இறந்தபிறகு அனுமதி வாங்கப்பட்டது. ஜெயக்குமார் என்ன படித்திருக்கிறார் என்றால் 8 ஆம் வகுப்பு 9 ஆம் வகுப்பு படித்திருக்கிறார். ஜெயக்குமார் படித்து முடித்தபின் சொந்தமாக கல்லு பட்டறை தொழில் செய்தாரா என்றால் இல்லை. பாண்டியன் டிம்பர் டிப்போவில் வேன் ஓட்டிக்கொண்டிருந்தார். சக்கர்வர்த்தி தான் கல்லுப்பட்டறை வைத்திருந்தார். 1985 வாக்கில் ஜெயக்குமார் அவர் அப்பாவுடன் கல்லுப்பட்டறைக்கு போய்வந்தாரா என்றால் இல்லை. மாயவரம் பஸ் ஸ்டாண்டு அருகில் ஜெயக்குமார் கழிவு நீர் வேன் சொந்தமாக வைத்து ஓட்டிவந்தார் என்றால் சரியல்ல. பாண்டியன் டிம்பர் டிப்போவில் வேன் ஓட்டிக்கொண்டிருந்தார். ஜெயக்குமார் 1990 முதல் 1992 வரை வாடகை சைக்கிள் கடை வைத்திருந்தார் என்றால் இல்லை சக்கரவர்த்திதான் வைத்திருந்தார். நான் சொல்வது தவறு என்றாலும் கல்லுப்பட்டறையும் வாடகை சைக்கிள் கடையும் ஜெயக்குமார் தான் வைத்திருந்தார் என்றால் சரியல்ல. சக்கரவர்த்திதான் வைத்திருந்தார். 1993 முதல் 1995 வரை ஜெயக்குமார் பூம்புகார் மற்றும் வானகிரியிலிருந்து மொத்தமாக மீன்கள் வாங்கி கேரளாவிற்கு ஏற்றுமதி செய்தது தெரியுமா என்றால் அது போல் செய்யவில்லை. அந்த விவரம் எனக்கு

தெரியவில்லை என்றாலும் அந்த காலகட்டத்தில் அவர் கேரளாவிற்கு மீன் ஏற்றுமதி செய்து வந்தார் என்றால் சரியல்ல. மயிலாடுதுறை வெள்ளாந்தெருவில் தனது சொந்த பணத்தை கொண்டு ஜெயக்குமார் வீடு வாங்கினார் என்றால் சரியல்ல. குடும்ப நிர்வாகத்தை என் அக்காவும் ஜெயக்குமாரும் தான் கவனித்து கொண்டார்கள் பிரகாஷ்ம் கோபாலும் வெளிநாடுபோய் சம்பாதித்த பணத்தை அக்காவுக்கும் ஜெயக்குமாருக்கும் அனுப்பி வைத்தார்கள். அதை வைத்து அந்த வீடு வாங்கப்பட்டது. பிரகாஷ் எந்த வருடம் எந்த நாட்டிற்கு போனார் என்றால் குவைத் நாட்டிற்கு போனார் வருடம் ஞாபகம் இல்லை. 10 வருடம் குவைத்தில் இருந்தார். கோபால் எந்த வருடம் எந்த நாட்டிற்கு போனார் என்றால் சிசில் நாட்டிற்கு போனார் வருடம் ஞாபகம் இல்லை. 6 வருடம் சிசில் நாட்டில் இருந்தார். பிரகாஷ்கும் கோபாலுக்கும் எவ்வளவு சம்பளம் என்று எனக்கு தெரியுமா என்றால் மாதம் 30, 40 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். மேற்படி விவரம் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றாலும் யூகத்தின் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் கோபாலும் பிரகாஷ்ம் சொன்னதன் அடிப்படையில் சொல்கிறேன். கோபாலும் பிரகாஷ்ம் என் அக்காவிற்கும் ஜெயக்குமாருக்கும் எவ்வளவு பணம் எப்போது அனுப்பினார்கள் என்று நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. என் அக்கா சொல்லி தெரியும். சிதம்பரத்தில் உள்ள சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் ஜெயக்குமார் மனைவி ராஜேஸ்வரி பெயரில் உள்ளது. அது எந்த வருடம் வாங்கப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. மணக்குடியில் ராஜேஸ்வரிக்கு சொந்தமான வீடு உள்ளது. அது எந்த வருடம் வாங்கப்பட்டது என்று தெரியாது. கோபாலும் பிரகாஷ்ம் தங்கள் சம்பாதித்த தொகையை என் அக்காவிற்கு அனுப்பி வைத்ததாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது உண்மையா என்றால் உண்மைதான். அதனால் அந்த வரவு செலவை பொறுத்தவரை என் அக்காவை கேட்டதால் தெரியும் என்றால் என் அக்காவிற்கு வயதாகிவிட்டதால் ஞாபகமறதி அதிகம். என்னையே சாப்பிட்டாயா என்று மூன்று முறை கேட்பார். பிரகாஷ் ஜெயக்குமாருக்கு பணம் அனுப்பியது எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. பிரகாஷ் சொல்லிதான் தெரியும். பணம் அனுப்பியதற்கான ரசீது வைத்திருப்பதாக பிரகாஷ் சொன்னார். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை வக்கீல் தட்டச்சு செய்து கையெழுத்து போட்டேனா என்றால் இல்லை. அவர்கள் கேட்டார்கள் நான்

சொன்னேன். ஜெயக்குமாருக்கு பிரகாஷ் எந்த தொகையும் அனுப்பவில்லை என்றாலும் அதைப்பற்றி நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள தகவல்கள் பொய் என்றால் சரியல்ல. வெள்ளாந்தெருவில் உள்ள வீடும் சிதம்பரத்தில் உள்ள மனையும் ஜெயக்குமாரின் தனிப்பட்ட சொத்து என்றாலும் குடும்ப சொத்து இல்லை என்றால் சரியல்ல. குடும்பத்தில் மூன்று மகன்களும் சம்பாதித்து வாங்கிய சொத்து. கச்சேரி ரோட்டில் உள்ள கடையும் 1ம் பிரதிவாதி உழைப்பின் மூலம் கட்டடப்பட்டது என்றாலும் அதில் சக்கரவர்த்திக்கு எந்த பங்கும் இல்லை என்றால் சரியல்ல. ஐவநல்லூரில் இருந்த சொத்தை விற்று வந்து கடை கட்டினார். உளுத்து குப்பையில் 300 குழி நிலமும் கச்சேரி ரோட்டில் ஒரு சின்னக்கடையும் அவருடைய சித்தப்பாவிற்கு இருந்தது. அவருக்கு வாரிசு இல்லாததால் அவர் இறந்த பிறகு சக்கரவர்த்திதான் அந்த சொத்துக்களை விற்று போட்டு கடையை கட்டினார். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லாத சங்கதிகளை தற்போது சொல்கிறேன் என்றாலும் அதனால் என்னுடைய விளக்கம் ஏற்கக்கூடியது இல்லை என்றால் சரியல்ல. உளுத்துக்குப்பையில் உள்ள சொத்தையும் கடையையும் சக்கரவர்த்தி எவ்வளவுக்கு விற்றார் என்று எனக்கு தெரியாது என்றால் சரி. குடும்ப விவரங்கள் எதுவும் தெரியாமல் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் மறுவிசாரணை**

மணக்குடியில் ராஜேஸ்வரி பெயரில் உள்ள சொத்து யார் வாங்கிய சொத்து என்றால் எனக்கு தெரியாது. குடும்பத்தில் உள்ள வரவு செலவுகளை என் அக்காவும் ஜெயக்குமாரும் தான் பார்த்துக்கொண்டார்கள்.